**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.II, SANKARI**

**MC No.2/2022 Date: 12-10-2023.**

எ.ம.சா.1 - ஜெயகாந்தன், த/பெ.நடராஜன்

மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி:-

1) மனுதாரர் வேறு ஒருவரை திருமணம் செய்து கொண்டார் என்றும் சொல்லும்போது, யாரை திருமணம் செய்து கொண்டார் என்றால் திருச்சியை சார்ந்த வினோத் என்பவரை திருமணம் செய்துகொண்டார். வினோத் என்பவரின் முழு முகவரி எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. ஆனால், மனுதாரர் தரப்பில் வினோத் என்பவரை சாட்சியாக போட்டுள்ளார், அந்த முகவரி தான். ம.சா.1 வினோத் என்பவரை திருமணம் செய்து கொண்டார் என்பதற்கான ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

2) நான் தாக்கல் செய்த விவாகரத்து வழக்கிலாவது மனுதாரர் வேறு ஒரு திருமணம் செய்து கொண்டாரா என்று நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் மனுதாரர் மீது அபாண்டமான குற்றம் சாட்டுவதற்காக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**(எதிர்மனுதாரர் சாட்சியம் அளிக்கும்போது திடீரென உணர்ச்சிவசப்பட்டு, அவருக்கு கைகளில் நடுக்கம் ஏற்பட்டதால், அவரின் உடல்நலம் கருதி, குறுக்கு விசாரணை தொடர்ச்சி 02.11.2023-ம் தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)**

Witness (Sd)- Jayakanthan

Typed to my dictation in open court read over and explained to the witnesses in the presence of the accused and admitted by him to be correct.

Sd/. N.Eniya,
Judicial Magistrate No.II,
Sankari.

.